# இந்தோனேசியாவிற்குத் தமிழர்களின் வருகையும் மேடானில் கம்போங் மெட்ராஸ் கிராமத்தின் தோற்றமும்

# The Coming of Tamils to Indonesia and the Emergence of Kampung Madras

இணைப் பேராசிரியர் முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல் /
Assoc.Prof.Dr. Samikkanu Jabamoney Ishak Samuel[1]
முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை / Dr.Manonmani Devi M.A.R Annamalai[2]
முனைவர் கிங்ஷ்தன் பால்தம்புராஜ் / Dr.Kingston Palthamburaj[3]

***Abstract***

Tamils live in 164 countries in the world. During different periods of time, they have migrated to various parts of the world from Tamil Nadu and Eelam. During the Pallava and Chola period, Tamils came to South East Asia as empire builders and sea merchants, but they were brought in as coolies to Malaysia, Singapore, Mauritius, Fiji, South Africa and Medan by the British rulers. The Tamils who have been brought in, in such a manner to Medan, Indonesia, are less known to the Tamil diaspora. To overcome this discrepancy, this article explains the history of Tamils who came to Indonesia in three phases and the creation of the new village at Kampung Madras in Medan, Sumatra.

**Key Words:** Indonesia, Tamils, Medan, Kampung Madras, Tamil diaspora

## அறிமுகம்

தமிழினம் உலகில் தோன்றிய இனங்களில் மூத்த இனமாகக் கருதப்படுகிறது. தமிழினம் கிறித்துவுக்கு முன் 10,000 ஆண்டு வரலாற்றைக் கொண்டுள்ளது. தமிழ் நாடு, ஈழம் ஆகிய இடங்களைப் பூர்வீகமாகக் கொண்டவர்களாகத் தமிழர்கள் திகழ்கின்றனர். தமிழர்கள், கிறித்து பிறப்புக்கு முன்பே கடல் பயணம் மேற்கொண்டு பல நாடுகளில் வாணிகம் செய்ததாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். பல்லவர் ஆட்சி காலத்திலும் சோழர் ஆட்சி காலத்திலும் தென்கிழக்காசியாவில் சில இடங்களில் தமிழர்கள் ஆட்சி அமைத்துள்ளதாகவும் வரலாறு கூறுகிறது (Rajantheran & Silllalee, 2014, pp. 9). இவ்வாறு சிறப்புற்றிருந்த தமிழர்கள் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கூலிகளாக உலகின் பல்வேறு பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர் (Silllaee & Rajantheran, 2014, p.38). அப்படிக் கொண்டு செல்லப்பட்டவர்களில் சிலர் மேடான், இந்தோனேசியாவிற்கும் கொண்டு

[1] The author is an Associate Professor in Tamil Language Programme, Sultan Idris Education University, Malaysia. samjabarose@yahoo.com.my

[2] The co-author is a lecturer in Tamil Language Programme, Sultan Idris Education University, Malaysia.

[3] The co-author is a free-lance researcher Coimbatore, Tamil Nadu, India. (Former lecturer at Sultan Idris Education University, Malaysia). fkingston@gmail.com

செல்லப்பட்டனர். இவர்கள் உருவாக்கிய கம்போங் மெட்ராஸ் கிராமத்தைப் பற்றி இவ்வாய்வுக் கட்டுரை விளக்கவுள்ளது.

## ஆய்வு முன்னோடிகள்

மேடான் தமிழர்கள் குறித்துப் பல்வேறு ஆய்வேடுகளும் ஆய்வுக் கட்டுரைகளும் இந்தோனேசிய மொழியில் வந்துள்ளன. இதுவரை ஐந்து முதுகலை ஆய்வுகள் மேடான் தமிழர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. Devi Ramadana (2017) *Gambaran Identiti Etnik pada Masyarakat Tamil di Kota Medan* என்ற தலைப்பில் முதுகலை ஆய்வை வடச் சுமத்திரா பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வு மேடான் தமிழர்களின் இன ஆளுமைகளை ஆராய மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி தமிழர்கள் இன உணர்வு மிக்கவர்கள் என்று கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

Siska Dorauli Tianur Sinaga (2016), *Sejarah Kampung Madras di Kelurahan Madras Hulu Kota Medan* என்ற தலைப்பில் முதுகலை ஆய்வை University Negeri Medan என்ற பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வில் கம்போங் மெட்ராஸின் வரலாறும் அக்கம்பத்து மக்களின் வாழ்க்கை முறையும் விளக்கப்பட்டுள்ளது.

Kartika Srikandi Ginting (2009), *Pengaruh Akulturasi Kebudayaan India Tamil Terhadap Budaya Indonesia di Kota Medan* என்ற தலைப்பில் முதுகலை ஆய்வை University Negeri Medan என்ற பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வில் கம்போங் மெட்ராஸின் வரலாறும் அக்கம்பத்து மக்களின் பண்பாடும் விளக்கப்பட்டுள்ளன.

Jhonny Edwin, S. (1995) *Pirartenei pada Aktifitas Religius Masyarakat Tamil di Shri Mariamman Kuil Medan: Kajian Struktur Muzik dan Teks* என்ற தலைப்பில் முதுகலை ஆய்வை வட சுமத்திரா பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வில் மேடான் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் வழிப்பாட்டு முறைகள் விளக்கப்பட்டுள்ளன.

Napitupulu, Burju Martua (1992) *Eksitensi Masyarakat Tamil di Kota Medan: Suatu Tinjauan Historis* என்ற தலைப்பில் முதுகலை ஆய்வை வட சுமத்திரா பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வில் கம்போங் மெட்ராஸின் வரலாறு விளக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வேடுகளைத் தவிர்த்து, ஏராளமான ஆய்வுக் கட்டுரைகள் மேடான் தமிழர்களைப் பற்றி இந்தோனேசிய மொழியில் எழுதப்பட்டுள்ளன. ஆனாலும், தமிழ்மொழியில் மேடான் தமிழர்கள் பற்றிய செய்திகள் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன.

## ஆய்வு நெறி முறைகள்

இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் கள ஆய்வு, நூலாய்வு ஆகிய இரண்டு அணுகுமுறைகள் கையாளப்பட்டுள்ளன. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன. மேலும், ஆய்வாளர்கள் மேடானுக்குச் சென்று கள ஆய்வு வழியும் தரவுகளைத் திரட்டியுள்ளனர். கள ஆய்வில் நேர்க்காணல் அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. மேடானில் வாழும் தமிழர்களிடம் இந்த நேர்க்காணல் நடத்தப்பட்டன. குறிப்பாக, ஸ்ரீ மாரியம்மன் கோயில் தலைவர் திரு.சந்திரன், சமுதாயத் தலைவர் திரு. நாராயணசாமி, மேடான் கத்தோலிக்க திருச்சபையின் பாதிரியார் அருட்திரு ஜேம்ஸ் பாரதபுத்ரா, வட சுமத்திரா பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி ரீத்தா தம்புனான், மதனமாலா ஆகியோரிடம் நேர்க்காணல் செய்யப்பட்டுத் தகவல்கள் திரட்டப்பட்டன.

## ஆய்வுத் தரவுகள் பகுப்பாய்வு

ஆய்வுத் தரவுகள் இந்தோனேசியாவிற்குத் தமிழர்களின் வருகை; மேடானில் கம்போங் மெட்ராஸின் தோற்றம் ஆகிய இரண்டு தலைப்புகளில் ஆய்வுத் தரவுகள் பகுப்பாயப்பட்டுள்ளது.

## இந்தோனேசியாவிற்குத் தமிழர்களின் வருகை

இந்தோனேசியாவிற்குத் தமிழர்களின் வருகை மூன்று அலைகளில் நடைப்பெற்றுள்ளது. முதலாவது அலை பல்லவர் ஆட்சிக் காலத்தில் நடைப்பெற்றுள்ளது. தென்கிழக்காசிய வரலாற்று ஆய்வாளர் குமரசுவாமி (1927) அவர்கள் பல்லவர் ஆட்சிக் காலமாகிய மூன்றாம் நூற்றாண்டில் தமிழர்கள் சுமத்திராவிற்குக் கடல் பயணம் மேற்கொண்டதாகக் கூறியுள்ளார். அக்காலக்கட்டத்தில் தென்கிழக்காசிய வாணிகமும் கடல் பாதையும் பல்லவர்களிடம் இருந்தது. நவம்பர், டிசம்பர் பருவக் காற்றின் போது தமிழர்கள் கடல் பயணம் மேற்கொண்டு பாருஸ், சுமத்திராவிற்கு வாணிபம் செய்ய வந்துள்ளனர் (Rusli Amran, 1981).

வாணிகம் செய்ய வந்த தமிழர்கள், தமிழர் சமயத்தையும் பண்பாட்டையும் இங்குள்ள மக்களிடம் பரப்பியுள்ளனர். மேலும், பல்லவக் காலத் தமிழ் எழுத்துகளை இங்குள்ள மக்களிடம் அறிமுகம் செய்துள்ளனர். தொடக்கக் காலத்தில் பல்லவர்கள் புத்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்ததால், புத்தச் சமயத்தைப் பரப்பியுள்ளனர். 717ஆம் ஆண்டு, வாஜாபோதி என்பவர் மகாயான என்ற பிரிவைச் சார்ந்த புத்தச் சமயத்தைச் சுமத்திரா மக்களிடம் பரப்பியுள்ளார். இதற்கான சான்றுகளைப் பாகாருயுங் என்ற இடத்தில் இன்றும் காணலாம். மேலும், கலிங்க மன்னர் ஆட்சிக் காலத்திலும் தென்கிழக்காசியாவில் ஸ்ரீ விஜயா போன்ற அரசாங்கங்களுடன் நெருங்கிய தொடர்பு பேணப்பட்டு வந்துள்ளது (Saifuddin Mayudin, 2014).

இரண்டாவது அலையில் தமிழர்கள் சோழ மன்னர் ஆட்சிக் காலத்தில் இந்தோனேசியத் தீவுக் கூட்டங்களுக்கு வந்துள்ளனர். பல்லவர்களுக்குப் பின் சோழர்கள் தென்கிழக்காசியாவின் கடல் பாதையையும் வாணிபத்தையும் தங்கள் கைக்குள் கொண்டு வந்தனர். வியாபார நோக்கோடு வந்த தமிழர்கள், இந்து சமயத்தையும் பண்பாட்டையும் இந்தோனேசியாவில் பரப்பினர். பாருஸ், சுமத்திராவில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் 9ஆம் நூற்றாண்டிலிருந்து 12ஆம் நூற்றாண்டு வரை தமிழர்கள் குடியிருப்பு பாருஸ், சுமத்திராவில் அமைக்கப்பட்டிருந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது (Saifuddin Mayudin, 2014). இக்கல்வெட்டை 1932ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் நீலக்கண்ட சாஸ்திரி மொழி பெயர்த்துள்ளார். இவர் இக்கல்வெட்டு கி.மு. 1088ஆம் ஆண்டு எழுதப்பட்டதாகவும் அக்காலக் கட்டத்தில் குலத்துங்க தேவ சோழன் ஆட்சியிலிருந்ததாகவும் தென் இந்தியா முழுவதும் அவர் ஆட்சியின் கீழ் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார் (Saifuddin Mayudin, 2014).

மேலும், இக்கல்வெட்டில் தமிழர்கள் வாணிகம் செய்த இடங்களில் கோட்டை அமைத்து, பாதுகாவலர்களை நிறுத்தி வியாபாரம் செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் தங்களுடன் கோயில் பூசாரி, கட்டடக் கலைஞர் போன்றோரை அழைத்து வந்துள்ளனர். இவர்கள் சுமத்திராவில் வாழும் பாதாக் இனப் பெண்களைத் திருமணம் செய்துள்ளனர். பாதாக் இனத்தவரிடம் இன்னமும் தமிழர் பண்பாட்டுக் கூறுகள் காணப்படுகின்றன (Saifuddin Mayudin, 2014). மேலும், தஞ்சாவூரில் கண்டெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டில் கி.மு. 1025ஆம் ஆண்டில் ராஜ ராஜேந்திர சோழன், ஸ்ரீ விஜயா அரசு மீது படையெடுத்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது (Saifuddin Mayudin, 2014). இக்குறிப்புகள் தமிழர்களுக்கும் தென்கிழக்காசியாவிற்கும் இருந்த நெருக்கமான உறவைக் காட்டுகின்றன.

பல்லவர், சோழர் ஆட்சி காலத்தைத் தவிர்த்து, தமிழர்கள் டச்சுக்காரர்களின் ஆட்சியின் போது இந்தோனேசியாவிற்கு வந்துள்ளனர். இது தமிழர்களின் மூன்றாவது வருகை அலையாகும். மூன்றாவது அலையில் தமிழர்கள் இரண்டு நிலைகளில் இந்தோனேசியாவிற்கு வந்துள்ளனர். முதலாவதாக 17ஆம் நூற்றாண்டில்

வியாபாரிகளாக வந்துள்ளனர். தமிழர்கள் டச்சுக்காரர்களுக்குத் தேவையான மசாலைப் பொருள்களை வணிகம் செய்ததால், டச்சுக்காரர்கள் தமிழர்களை இந்தோனேசியாவில் வணிகம் செய்வதற்கு அனுமதித்துள்ளனர். வணிகத்தின் போது தமிழர்கள் கூடுதலான நாள்கள் இந்தோனேசியத் தீவுகளில் குறிப்பாக சுமத்திராவில் தங்கி சென்றுள்ளனர். ஆனாலும், இவர்களின் எண்ணிக்கை மிக குறைவான அளவில் இருந்தது குறிப்பிடத்தக்கது (Kumar, S. 2009).

இரண்டாவதாக 19ஆம் நூற்றாண்டில் தமிழர்கள் அதிகமான எண்ணிக்கையில் புகையிலை தோட்டத்தில் கூலிகளாக வேலை செய்வதற்கு மேடான், சுமத்திராவிற்குக் கொண்டு வரப்பட்டனர். 1863ஆம் ஆண்டில், Kuypers dan Jacobus Nienhius ஆகிய இருவரும் டெலி சுல்தானிடம் அனுமதி பெற்று மேடானில் புகையிலை தோட்டங்களை நிறுவினர். மேடான் புகையிலை உலகத் தரம் பெற்றுப் புகையிலைக்கான தேவை அதிகமாகியது. இதனால், புதிய தேயிலை தோட்டங்கள் அமைக்கப்பட்டன. கூலியாள்களின் தேவை அதிகமாகியது. உள்நாட்டில் போதுமான தொழிலாளர்கள் கிடைக்கவில்லை. இதனால், வெளி இடங்களிலிருந்து கூலியாள்கள் கொண்டுவரப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. டச்சுக்காரர்கள் இந்தியா, பினாங்கு, சிங்கப்பூர் ஆகிய இடங்களிலிருந்து தமிழர்களைப் புகையிலை தோட்டத்தில் வேலை செய்வதற்குக் கூலிகளாகக் கொண்டு வந்தனர் (Kartika Srikandi Ginting, 2009).

தமிழர்கள் மேடான், சுமத்திராவிற்கு ஒப்பந்த அடிப்படையில் கொண்டு வரப்பட்டனர். புகையிலை தோட்ட முதலாளிகள் பயணக் கட்டணத்தைச் செலுத்தி குறிப்பிட்ட ஆண்டுகள் வேலை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் தமிழர்களை மேடான் புகையிலை தோட்டத்தில் கூலிகளாக வேலை செய்வதற்குக் கொண்டு வந்தனர் (Kartika Srikandi Ginting, 2009). இதனைத் தொடர்ந்து 1880ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசு *British Protector of India Labour* என்ற சட்டத்தை இயற்றினர். இச்சட்டம் தமிழர்கள் சுமத்திராவிற்குச் செல்ல அனுமதி வழங்கியது. இச்சட்டத்தின் வழி, தமிழர்கள் சுமத்திராவிற்குக் கட்டுப்பாடு இல்லாமல் செல்ல தொடங்கினர். 19ஆம் நூற்றாண்டு இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டு தொடக்கத்திலும் தமிழர்கள் சுதந்திரமாக வட சுமத்திராவிலுள்ள *Langkat, Binjai, Medan, Lubuk Pakam, Tebing Tinggi, Pematang Siantar* போன்ற இடங்களிலுள்ள புகையிலை தோட்டங்களில் வேலை செய்வதற்குச் சென்றனர் (*Siska Dorauli Tianur Sinaga, 2016*).

1869ஆம் ஆண்டில், 800இல் இருந்து 900 வரையிலான தமிழர்கள் புகையிலை தோட்டங்களில் வேலை செய்வதற்கு மேடானுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மேலும், 1872ஆம் ஆண்டில் 459 தமிழர்கள் மேடானுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.1886ஆம் ஆண்டில் மேலும் 2000 தமிழர்கள் மேடானுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் மேடானிலிருந்த 15 புகையிலை தோட்டங்களில் வேலை செய்வதற்கு அமர்த்தப்பட்டனர். 1900ஆம் ஆண்டில் மேடானில் சுமார் 3,270 தமிழர்கள் வாழ்ந்ததாக குறிப்புகள் காட்டுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் தமிழர்களின் எண்ணிக்கை மேடானில் அதிகரித்து வந்துள்ளது (Luckman Sinar, 2008).

புகையிலை தோட்டத்தில் தமிழர்கள், புகையிலையைப் பயிரிடுதல், புகையிலையை அறுவடை செய்தல், புகையிலையைப் பதப்படுத்துதல் ஆகிய பணிகளைச் செய்து வந்தனர். புகையிலையைத் தமிழர்கள் தயார் செய்ததால், மேடான் புகையிலை தங்கப் புகையிலை என்ற பெயரைப் பெற்றது என்று கூறப்பட்டுள்ளது (Luckman Sinar, 2008).

புகையிலை தொழில் தவிர்த்து, டச்சுக்கார அரசு, பதப்படுத்திய புகையிலையை மாட்டு வண்டியில் ஏற்றிச் செல்லும் போக்குவரத்துப் பொறுப்பையும், புதிய சாலைகளைத் திறக்கும் பணியையும், மாடு வளர்க்கும் தொழிலையும் செய்வதற்குத் தமிழர்களுக்கு உரிமை வழங்கியது. இதன் காரணமாகத் தமிழர்கள் *Tuntungan* வட்டாரத்தில் மாடு வளர்க்கும் தொழிலைத் தொடங்கினர்.

மாட்டுப் பாலை டச்சுக்காரர்களுக்கு விற்று வந்தனர் (Luckman Sinar, 2008).

புகையிலை தோட்டத்தில் கூலிகளாக வந்த தமிழர்கள் தற்பொழுது அரசாங்கச் சேவையிலும் வியாபாரத்திலும், தோட்டத் தொழில்களிலும் வேலை செய்து வருகின்றனர். தற்பொழுது தமிழர்கள் யாரும் புகையிலை தோட்டத்தில் கூலி வேலை செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கம்போங் மெட்ராஸின் தோற்றம்

தமிழர்கள் பொதுவாகக் கூடி வாழும் இனத்தைச் சார்ந்தவர்கள். தமிழர்கள் எங்குப் புலம் பெயர்ந்து சென்றாலும், அங்கு ஒரு குடியிருப்புப் பகுதியை உருவாக்கிக் கொண்டு வாழ்பவர்கள். மேலும், கோயில் இல்லாதா ஊரில் குடியிருக்காதே என்பதற்கேற்ப ஒரு கோயிலையும் அப்பகுதியில் அமைத்துக் கொண்டு வாழ்பவர்கள். மேடானுக்குப் புலம் பெயர்ந்து சென்ற தமிழர்கள், மேடான் நகரில் கம்போங் மெட்ராஸ் என்ற குடியிருப்புப் பகுதியை உருவாக்கி வாழ்ந்துள்ளனர். கம்போங் மெட்ராஸ் எந்த ஆண்டில் தொடங்கப்பட்டது என்ற வரலாறு கிடைக்கவில்லை. ஆனாலும், கம்போங் மெட்ராஸிலுள்ள ஸ்ரீ மாரியம்மன் ஆலயம் 1884இல் கட்டப்பட்டது என்ற வரலாற்றுக் குறிப்பு இருப்பதால், கம்போங் மெட்ராஸ் 1884இல் அல்லது அதற்கு முந்தைய ஆண்டில் உருவாக்கப்பட்டிருக்கலாம் (Siska Dorauli Tianur Sinaga, 2016).

கம்போங் மெட்ராஸ் தொடக்கக் காலத்தில் கம்போங் கிலிங் என்று அழைக்கப்பட்டிருந்தது. பொதுவாக, மலேசியா, சிங்கப்பூர், மேடான் ஆகிய இடங்களில் வாழும் தமிழர்களைக் கிலிங் என்று மலாய்க்காரர்கள் அழைப்பது வழக்கம். இதன் காரணமாகவே, தொடக்கத்தில் இக்கிராமம் கம்போங் கிலிங் என்று அழைக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் தொடக்கக் காலத்தில் கலிங்க நாட்டிலிருந்து தென்கிழக்காசியாவிற்கு வருகைப் புரிந்ததால் கலிங்கம் என்ற வார்த்தை மருவி கிலிங் என்று அழைக்கப்பட்டதாகக் குறிப்புகள் காட்டுகின்றன. மலாய் இலக்கிய நூல்களாகிய Sejarah Melayu, Hikayat Hang Tua ஆகிய நூல்களில் இந்தியாவை Benua Keling (கெலிங் கண்டம்) என்றே குறிக்கின்றனர். இதனால், இந்தியாவிலிருந்து வந்த தமிழர்களைக் கிலிங் என்றே அழைத்தனர் (Kartika Srikandi Ginting, 2009).

மேடான் பகுதியில் கிலிங் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டதற்கான வேறொரு காரணம் கூறப்படுகின்றது. ஒரு முறை புகையிலை தோட்டத்தில் தமிழர் ஒருவர் டச்சுக்காரனைக் கொலை செய்து விட்டதால், தமிழர்களைப் பார்க்கும் போதெல்லாம் “*killing men*” என்று அழைக்கப்பட்டதாகவும் அதுவே நாளடைவில் மருவி கிலிங் என்று வந்ததாகவும் வேறு ஒரு குறிப்புக் காட்டுகின்றது. எது எப்படி இருப்பினும், இன்றளவும் தமிழர்களைக் கேவலமாகப் பேசும் போதெல்லாம் கிலிங் என்ற வார்த்தை மலேசியாவிலும் மேடானிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கிலிங் என்ற சொல் தமிழர்களைத் திட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் சொல் என்பதால் கம்போங் கிலிங் என்ற பெயர் கம்போங் மெட்ராஸாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது (Kartika Srikandi Ginting, 2009).

கம்போங் மெட்ராஸ் மேடான் நகரில் பாபுரா என்ற நதிக்கு அருகில் அமைந்துள்ளது. நதி அத்தியாச வசதிகளுக்குத் தேவையான ஒன்று என்பதால் மேடான் தமிழர்கள் இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர். மேலும், ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்ல இந்த நதியையே பயன்படுத்தியுள்ளனர் (Siska Dorauli Tianur Sinaga, 2016).

கம்போங் மெட்ராஸ் 10 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்டுள்ளது. இக்கிராமத்தில் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம், ஸ்ரீ சுப்ரமணியம் ஆலாயம், கௌடியா பள்ளிவாசல், குருடுவாரா, கல்சா தேசியப் பள்ளி ஆகியவை இடம்பெற்றுள்ளன. மேலும், தமிழர்களுக்குச் சொந்தமான ரக்சான பள்ளி, தர்ம புத்ரா பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகள் இக்கிராமத்தில் அமைந்துள்ளன (Siska Dorauli Tianur Sinaga, 2016).

தொடக்கக் காலத்தில், ஸ்ரீ மாரியம்மன் ஆலயம் தமிழர்கள் ஒன்று கூடும் இடமாக அமைந்துள்ளது. *Lubuk Pakam, Deli Tua, Batang Kuis, Binjai, Langkat* போன்ற பகுதிகளில் அமைந்திருந்த புகையிலை தோட்டங்களில் வேலை செய்து வந்த தமிழர்கள் ஆண்டுக்கு ஒரு முறை இவ்வாலயத்தில் கூடுவது வழக்கமாகும். தோட்ட நிர்வாகம் தீபாவளி பண்டிகைக்கு ஒரு வாரம் விடுமுறை வழங்குவது வழக்கம். இந்த விடுமுறையில் தோட்ட தொழிலாளர்கள் மாட்டு வண்டியில் குடும்பம் குடும்பமாக இந்த ஆலயத்திற்கு வந்து மற்ற தமிழர்களோடு ஐக்கியம் கொள்வது வழக்கமான ஒன்றாகும் (Lubis Zulkifli, 2009).

மேடான் தமிழர்கள் உருவாக்கிய கம்போங் மெட்ராஸில் தற்பொழுது 30இல் இருந்து 35 குடும்பங்கள் மட்டுமே வசித்து வருகின்றனர். அனேக தமிழர்கள் தங்களுடைய நிலங்களைச் சீனர்களிடம் விற்று விட்டுப் பிழைப்புத் தேடி வேறு பகுதிகளுக்குச் சென்று விட்டனர். தற்பொழுது சீனர்கள் தான் அதிக அளவில் கம்போங் மெட்ராஸில் வாழ்கின்றனர். கம்போங் மெட்ராஸில், சீனர்கள் சன் ப்ளாசா, கேம்ப்ரேஜ் சிட்டி போன்ற ஆடம்பர வியாபரத் தளங்களை அமைத்துள்ளனர் (Siska Dorauli Tianur Sinaga, 2016).

தற்பொழுது, 13 மாவட்டங்களில் தமிழர்கள் வாழ்கிறார்கள். கம்போங் மெட்ராஸை தவிர்த்து, *Tanjung Keling, Tanjung Jati, Binjai, Buluh Cina, Sei Semayang, Glugur Rimbun, Medan Tuntungan, Helvetia, Saentis, Sampali, Batang Kuis, Lubuk Pakam, perkebunan Bekala* ஆகிய இடங்களில் தமிழர்கள் அதிகமாக வாழ்கின்றனர். மேடானைத் தவிர்த்து, Tebing Tinggi என்ற இடத்தில் அதிகமான தமிழர்கள் வாழ்கின்றனர். இவ்விடம் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் டச்சு அரசால் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது இவ்விடத்தில் 79 தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர் (Siska Dorauli Tianur Sinaga, 2016).

## முடிவுரை

இந்தோனேசியாவிற்குத் தமிழர்கள் மூன்று அலைகளில் வருகை புரிந்துள்ளனர். டச்சுக்காரர் ஆட்சியில் புகையிலை தோட்டத்தில் கூலி தொழிலாளர்களாக வந்த தமிழர்கள் இன்றளவும் மேடானில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அமைத்த கம்போங் மெட்ராஸ் என்ற கிராமம் இன்று சீனர்களின் ஆதிக்கத்தில் இருக்கிறது.

**References**


Agus Riyaf dan Noviy Hasanah. (2016). Perubahan Rangkaian Ritual Thaipusamdi KuilSree SoepramaniemNagarattar pada Etnik Tamil Medan. *Jurnal Antropologi Sosial dan Budaya*. Medan: Universiti Negeri Medan.

Anthony Reid. (2015). *History of Southest Asia, Critical Croosroads*. West Sussex: John Wiley & Sons. Ltd.

Azyumardi Azra. (2007). *Merawat Kemajemukan Merawat Indonesia*. Jakarta: Kanisius.

Barth Frederich. (1988). *Kelompok Etnik dan Batasannya*. Jakarta: Universitas Indonesia.

Brahma Putro. (1981). *Karo dari Jaman ke Jaman*. Medan: Yayasan Massa.

Burju Martua Napitupulu. (1992). *Eksistensi Masyarakat Tamil di Kota Medan: Suatu TinjauanHistoris 1966-1986*. Tesis Sarjana Sejarah.Medan: Fakulti Sastera, USU, Medan.

Coomaraswamy. (1927). *History of Indian and Indonesian Art*. Washington: Amozon.

Cudamani. (1980). *Pengantar Agama Hindu untuk Perguruan Tinggi*. Jakarta: Yayasan Dharma Sarathy.

Daldjoeni, N. (1991). *Ras-ras Umat Manusia: Biografis, Kulturhistoris, Sosiopolitis*. Bandung: Citra Aditya Bakti.

Devi Ramadana. (2017). *Gambaran Identiti Etnik pada Masyarakat Tamil di Kota Medan*.Tesis Sarjana Psikologi. Medan: Fakulti Psikologi, Universiti Sumatera Utara.

Jhonny Edwin, S. (1995). *Pirartenei pada Aktifitas Religius Masyarakat Tamil di Shri Mariamman Kuil Medan: Kajian Struktur Musik dan Teks*. Tesis Sarjana Etnomusikologi. Medan: Fakulti Sastera, USU.

Kartika Srikandi Ginting. (2009). *Pengaruh Akulturasi Kebudayaan India Tamil Terhadap Budaya Indonesia di Kota Medan*. Tesis Sarjana Pendidikan Sejarah. Medan: Fakulti Ilmu Sosial, Universiti Negeri Medan.

Kobalen, A.S. (2004). *Idealnya Sebuah Perkawinan Hindu Tamil*. Jakarta: Pustaka Mitra Jaya.

Kumar,S. (2009). *Komunitas Tamil di Kota Medan*.Medan: Universitas Sumatera Utara.

Lubis Zulkifli.2005.*Kajian Awal Tentang Komunitas*Tamil*dan Punjabi Di Medan.*Medan: Universiti Sumetera Utara.

Lubis Zulkifli. (2009). Komunitas Masyarakat Tamil dalam Kemajemukan Masyarakat di Sumatera Utara.*Jurnal Antropologi Sosial dan Budaya*. Medan: Universitas Negeri Medan.

Napitupulu, Burju Martua. (1992). *Eksitensi Masyarakat Tamil di Kota Medan: Suatu Tinjauan Historis*. Tesis Sarjana Sejarah. Medan: Fakulti Sejarah, Universiti Sumatera Utara.

Rajantheran, M., & Silllalee, K. (2014). "Inthiyath Thenkilakkasiyath Thonmaith Thodarpukal: Oru Paarvai", Buku Peringatan Tavathiru Thaninayaga Adikalar, Sempena Ulangtahun Sentineri. (Eds) Mohanadass Ramasamy & Krishnan Maniam. (pp. 9-26). Kuala Lumpur: Jabatan Pengajian India.

Rusli Amran. 1981. *Sumatera Barat hingga Plakat Panjang*.Jakarta: Penerbit Sinar Harapan.

Saifuddin Mayudin. (2014). *Biografi: Anna Amartya Dharma D. Kumarasamy (D.K)*. Medan: Yayasan Sai Ganesha.

Sandhu, K.S &Mani, A. (1980). *Indian Communities in Southeast Asia*. Singapore: Times Academic Press.

Silllalee, K, & Rajantheran, M. (2014). "Hindu Religious Practices Exposed in Malaysian Tamil Movies", Journal of Indian Culture and Civilization. (Vol. 1, pp. 37-44).

Siska Dorauli Tianur Sinaga. (2016). *Sejarah Kampung Madras di Kelurahan Madras Hulu Kota Medan*. Tesis Sarjana Pendidikan Sejarah. Medan: Fakulti Ilmu Sosial, Universiti Negeri Medan.

Tengku Luckman Sinar. (1988). *Sejarah Deli Serdang*. Lubuk Pakam: BPPD

Tuanku Luckman Sinar. (2008). *Orang India di Sumatera Utara*. Medan: Forkala Sumut.